**செ. கு. எண்: 099** **நாள்: 22.06.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 22.6.2018</u>

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம், வீரபாண்டி கிராமத்தைச் சேர்ந்த திருமதி ராஜம்மாள் என்பவரின் மகன் திரு. சௌந்திரபாண்டி மற்றும் அவரது மருமகள் திருமதி முத்துலட்சுமி ஆகியோர் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார்கள் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், தப்புகுண்டு கிராமம், தாடிச்சேரியைச் சேர்ந்த திருமதி தேவி என்பவரின் கணவர் திரு. செந்தில்குமார் என்பவர் திருப்பூர் தெற்கு வட்டம், கருவம்பாளையம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், கல்லாக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. கணேசன் என்பவரின் மகன் திரு. சுப்பிரமணியன் மற்றும் திரு. சுப்பிரமணியன் என்பவரின் மனைவி திருமதி பத்மா ஆகியோர் சாலை விபத்தில் உயிரிழந்தார்கள் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், எல்.என்.புரத்தைச் சேர்ந்த திரு. ரவி என்பவரின் மகன் திரு. கார்த்திக்கேயன் என்பவர் நானாகுடி வளைவின் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஊஞ்சவேலாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. காளியப்பகவுண்டர் என்பவரின் மகன் திரு. காளிங்கராஜ் என்பவர் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், அடங்கார்குளம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி சுசீலா என்பவரின் கணவர் திரு. முருகேசன் என்பவர் உப்பிலிப்பாடு குளத்தில் மீன் பிடிக்க சென்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், ரெகுநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் மகன் செல்வன் வீரராகவன் என்பவர் குளத்தில் குளிக்க சென்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், பரங்கிப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. முகமது ஹனிபா என்பவரின் மகன் திரு. எம். இலியாஸ் கடலில் மூழ்கிய வேறு ஒரு நபரை காப்பாற்ற முற்பட்டபோது ஏற்பட்ட விபத்தில் பலத்த காயமடைந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், நம்பிவயல் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகன் என்பவரின் மனைவி திருமதி விஜயசாந்தி என்பவர் மின்கசிவு காரணமாக தனது கூரை வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், தாம்பரம் நகரைச் சேர்ந்த திரு. வீ. ஜெயராமன் என்பவரின் மகன் செல்வன் கௌதம் தரைக் கிணற்றில் விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், அட்டகட்டி பகுதியைச் சேர்ந்த திரு. மனோகரன் என்பவரின் மகள் செல்வி மோனிகா என்பவர் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த **13** நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இச்சம்பவங்களில் உயிரிழந்த **13** நபர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**